**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**OS.79/2023**

பெயர் : **மணிவண்ணன்** (PW1) (Cross )

த/க/பெ. :

தேதி : 25.11.2025

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வா.சா.ஆ. 1 கிரய ஆணத்தின் அடிப்படையில் தான் இந்த வழக்கு தொடர்ந்துள்ளோம். கீழ் மேல் தெற்புறம் 14 அடி இ 10 அங்குலம் உள்ளது வடபுறம் 15 அடி 6 அங்குலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது எ ன்றால் சரிதான். ஆவண படி 1687 சதுரடி சொத்து என்றால் சரிதான். பிரதிவாதி சொத்து என் சொத்தின் கீழ் புறம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 சொத்தின் மேற்கே உள்ள சொத்து என் தந்தை ராமமூர்த்தி பெயரில்உள்ளது என்றால் சரிதான். நான் கிரயம் பெற்ற சொத்தில் தான் பிரதிவாதி கீழ் மேல் 12 அடி, தென் வடல் 167.5 அடி ஆக மொத்தம் 2010 சதுரடி ஆக்கிரமித்து விட்டதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அதில் 400 சதுரடி பிரதிவாதி வீடு உள்ளதாக சொல்லி உள்ளேன். என் தந்தை பெயரில் உள்ள சொத்து 170/2 ன் ஒரு பகுதி என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் புல எண். 170 க்கான வரைபடம் என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ. 1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** அதில் உட்பிரிவு 8 பிரதிவாதியுடையது, என்னுடைய உட்பிரிவு 7, என் தந்தை உட்பிரிவு 6. சீர்காழி மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் OS. 170/2005 வழக்கு பிரதிவாதியின் தந்தை ரங்கநாதன் என் மீது தாக்கல் செய்திருந்தால் என்றால் நினைவில்லை. அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர், சர்வேயர் என் சொத்தையும் அளவீடு செய்து அறிக்கை போட்டுள்ளார் என்றால் தெரியாது. அந்த வழக்கை என் தந்தை நடத்தி வந்தார். இந்த வழக்கின் பிராது சொத்தின் அளவுகளை பொருத்து திருத்தப்பட்டுள்ளது என்றால் தெரியாது. பிரதவாதியின் வீடு, மனைகட்டு அவருடைய பாட்டனார் காலத்தில் இருந்து உள்ளது என்றால் சரியல்ல தந்தை வாங்கியது. பிரதிவாதி 2013-2014 ல் வீடு கட்டினார் என்றால் நினைவில்லை. எந்த தேதியில் ஆக்கிரமிப்பு செய்ததாக என் பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்பது நினைவில்லை. 2364 சதுடிர ஆக்கிரமிப்பு செய்ததாக முதலில் வழக்கில் சொல்லி உள்ளோம் என்றால் தெரியவில்லை. தற்போது ஞாபகம் இல்லை. என் சொத்திற்கும்பிரதிவாதி சொத்திற்கும் இடையில் பழைய குட்டி சுவர்

உள்ளது என்றால் சரிதான். அது தான் இரு சொத்துக்கும் எல்லை என்றால் அவ்வாறு இல்லை. 2013 ல் வீடு கட்ட ஆரம்பித்து 2014 ல் பிரதிவாதி குடிபோயிவிட்டார் என்றால் தெரியவில்லை. வீடு கட்ட ஆரம்பிக்கும் போது ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். ஆக்கிரமிப்பை தீர்மானிக்க சர்வேயர் நியமனம் கோரி மனுதாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆக்கிரமிப்பு சொத்துக்களாக என் பிராதில் 3 வது பாராவில் சொன்ன விஸ்தீரணத்திற்கு முரண்பட்டு 4 வது பாராவில் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. பிராதில் 1 வது அயிட்ட சொத்தாக காட்டியுள்ள விஸ்தீரணம் சரிதான். என் சொத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்யவிலை என்றாலும் அவர் சொத்தில் தான் வீடு கட்டியுள்ளார்ள ன்றாலும் சரியல்ல. பிரதிவாதி அவர் சொத்தில் வீடு கட்டியுள்ளதால் தான் வீடு கட்டும் போது நாங்கள் ஆட்சேபிக்க வில்லை என்றால் சரியல்ல. ஆக்கிரமிப்பு சொத்ததாக சொல்லப்படும் சொத்தை நீதிமன்ற ஆணையர் சர்வேயர் அளந்து அறிக்கை தாக்கல் செய்யாமல் இந்த வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி வீடு ஏற்கனவே ஓட்டு வீடாக இருந்தது என்றால் சரிதான். பிரதிவாதி ஐடி நிறுவனத்தில் பணிபுரிகிறார் என்றால் தெரியாது. பிரதிவாதி சொந்த வருமானத்தை கொண்டு ஆர்சிசி வீடு கட்டியுள்ளதால் காழ்புணர்ச்சி காரணமாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக வழக்கிற்கு முன்பு வழக்கறிஞர் அறிப்பு கொடுத்துள்ளோமா என்றால் இல்லை, போலிசில் புகார் கொடுத்துளோம் தேதி நினைவில்லை சிவில் வழக்கு என்று சொல்லி விட்டார்கள். இந்த விபரத்தை வழக்கில் சொல்லவில்லை. இந்த வழக்கில் எந்த வித உண்மை தன்மையும் இல்லை என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.